**இறப்புக் காப்பு இரு மடங்கு - விபத்துக் காப்பு மும் மடங்கு**

இத்திட்டத்தில் ஆயுள் காப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பாலிசிதாரர் பாலிசி தவணைக்காலத்தில் துரதிஷ்ட வசமாக இறக்க நேர்ந்தால் உடனடியாக இருமடங்கு காப்பீட்டுத் தொகை மற்றும் அது வரை கணக்கில் சேர்ந்த இலாபத் தொகை வழங்கப்படுகிறது.

விபத்தின் காரணமாக இறப்பு நேர்ந்தால், 3 மடங்கு காப்பீட்டுத் தொகை உடனடியாக வழங்கப்படுகிறது. மிகக்குறைந்த தொகையை பிரீமியத்துடன் சேர்த்து கட்டுவதன் மூலம் இச்சலுகையை பாலிசிதாரர் பெறலாம். இச்சலுகை பெற அதிக பட்ச உச்ச வரம்பு வயது 70 ஆகும்.

விபத்துப் காப்பு தொகை மற்ற பாலிசிகளில் பெறப்பட்ட விபத்துக் காப்பை பொறுத்து அமையும்.

**திறனிழப்பு பாதுகாப்பு**

விபத்தின் காரணமாக திறனிழப்பு ஏற்படுமாயின் ஒரு காப்பீட்டுத் தொகையை 10 வருடத்திற்கு-மாதத்தவணையாக பிரித்து வழங்கப்படுகிறது. அத்துடன் திறனிழப்பு ஏற்பட்ட தேதியிலிருந்து பிரீமிய விலக்கும் வழங்கப்படுகிறது.

விபத்துக் காப்பு சலுகை பெறுகின்றவர்களுக்கு மட்டுமே இது வழங்கப்படும்.

**பணத்திற்கு முழு பாதுகாப்பு**

நாம் முதலீடு செய்கின்ற பணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாயின் அது பாதுகாப்பானோர் கைகளில் இருக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்கின்ற தொகை நேர்மையான நிர்வாகம் தெளிவான முதலீட்டுக் கொள்கை என பல்வேறு சிறப்புகளைக் கொண்ட நிர்வாகத்தின் வசம் இருக்கிறது.

**இலாபத் தொகை மற்றும் இறுதி கூடுதல் இலாபத் தொகை**

பிரீமியத் தொகையினை முதலீடு செய்வதன் மூலம் கிட்டும் இலாபத்தை எல்.ஐ.சி நிறுவனம் பாலிசிதாரர்களுக்கு வருடா வருடம் கணக்கிட்டு பகிர்ந்தளிக்கிறது. இந்த இலாபத்தொகை முதிர்வின் போதோ அல்லது அதற்கு முந்தைய இறப்பின் போதோ வழங்கப்படுகிறது.

தவிர 17 வருடங்கள் முடிவடைந்த பாலிசிகளுக்கு இறுதி கூடுதல் இலாபத் தொகையும் வழங்கப்படுகிறது. இது முதிர்வுத் தொகையுடன் சேர்த்து வழங்கப்படும்.

**கடன் வசதி**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறலாம். கடன் பெறுவதற்கான விதிமுறைகள் மிக விரைவாகவும் சுலபமாகவும் பெறும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளன.

**வருமான வரி சலுகைகள்**

**Section 80(C) of IT Act.**

மேற்கூறிய வருமானவரி விதியின் படி காப்பீட்டுக்காக கட்டப்படும் பிரீமியத்தொகைக்கு வருமானவரி விலக்களிக்கப்படுகிறது. நிகர வருவாயில் இப் பாலிசிக்கான பிரீமியத் தொகை நேரடியாக குறைக்கப் படுகிறது. இச்சலுகைக் கான அதிக பட்சமாக உச்ச வரம்பு 1,00,000 ஆகும்.

இந்த சலுகை பாலிசிதாரரின் பெயரிலுள்ள பாலிசிகளுக்கு மட்டுமல்லாமல், மனைவி மற்றும் பிள்ளைகளின் பாலிசிகளுக்கும் பொருந்தும். (மணமான மகள்களின் பெயரில் உள்ள பாலிசிகளு

**Section 10(10D) of IT Act.**

பாலிசி முதிர்வடையும் போது வழங்கப்படும் முதிர்வுத்தொகை அல்லது இடையில் இறப்பு நேர்ந்தால் வழங்கப்படும் தொகை இவை இரண்டிற்குமே வருமான வரி விலக்கு அளிக்கப்படுகிறது. அந்த தொகைக்கு வருமானவரி செலுத்த தேவையில்லை. இது காப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு சலுகையாகும்.

**ஒப்புவித்தல்**

மூன்று வருடங்களுக்கு மேல் பிரீமியம் செலுத்திய பின்னர் திட்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம் ஆனால் அப்படி விலகும் போது அதுவரை காப்பளித்ததற்கான தொகை குறைக்கப்படும்.

**இதர நன்மைகள்**

எல்.ஐ.சி வீட்டு வசதி மற்றும் நிதி நிறுவனத்தில் கடன் பெறவும் இப்பாலிசி பயன்படுகிறது. சில குறிப்பிட்ட வங்கிகளில் வங்கிக் கடன் பெற இப்பாலிசி உதவும்.

**மிகக் குறைந்த பிரீமியத்தில் முக்கிய விருப்பச் சலுகைகள** (சற்றே கூடுதல் பிரீமியம் செலுத்திப் பெறவேண்டும்)

**தீவிர நோய் பாதுகாப்பு** (Critical Illness Rider)

இச்சலுகையினால் இப்பாலிசி திட்ட காலத்தில் தீவிர நோய் பாதிப்பிற்கு உள்ளானால் ஒரு கூடுதல் காப்பு தொகை உடனடியாக வழங்கப்படுகிறது. இதற்காக ஒரு சிறு தொகையினை பிரீமியத்துடன் சேர்த்து செலுத்த வேண்டும். இன்றைய தேதியில் கீழே கொடுக்கப் பட்ட நோய்களுக்கு பாதுகாப்பு கிட்டுகிறது :-

Heart Attack (Myocardial Infarction), Stroke (Cerebro-vascular Accident), Cancer, Kidney Failure, Major Organ Transplant, Paralysis, 3rd Degree Burns, Blindness, Coronary Artery By-pass Surgery, Heart Valve Replacement or Repair, & Aorta Graft Surgery.

**பிரீமிய விலக்குச் சலுகை** (Premium Waiver Benefit)

பிரீமிய விலக்குச் சலுகை என்பது, மேலே கொடுக்கப்பட்டுள்ள நோய்களினால் பாலிசிதாரர் பாதிக்கப்பட்டால் அதைத் தொடர்ந்த பிரீமியங்களிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.